**IN THE COURT OF ADHOC - (II)**

**CITY CIVIL COURT, CHENNAI -104**

**Pw1: Ramachandiran** **OS. NO:2767/2015** **DATE:22.02.2024**

குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்

நான் இந்த வழக்கை பிரதிவாதி மீது எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பணம் எனக்கு அவர்களிடமிருந்து வரவேண்டியிருப்பதால் அதை கேட்டு இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். வாதி கம்பெனி என்ன தொழில் செய்கிறது என்றால் **Security Service** செய்கிறோம். எல்லா வகையான **Security Service** யும் செய்கிறோம். நான் வாதி கம்பெனியில் **General Manager** ஆக உள்ளேன்.

நான் வாதி கம்பெனியில் 5 ஆண்டுகளாக **General Manager** ஆக உள்ளேன். வாதி கம்பெனி 2005 ல் ஆரம்பிக்கப்பட்டது. வாதி கம்பெனியில் தோராயமாக எவ்வளவு **Security Staffs** இருக்கிறார்கள் என்றால் 250 பேர் இருக்கிறார்கள். அவர்கள் **Contract Basics** ல் இருக்கிறார்கள். ஒரு கம்பெனிக்கு **Security** தேவைப்பட்டால் ஆட்களை வெளியில் இருந்து எடுத்து அனுப்பிவைப்போம், அவர்கள் யாரும் நிரந்தரமான பணியாளர்கள் அல்ல. இந்த வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும்.. பிரதிவாதி கம்பெனியை(**NAPC**) எங்களுக்கு எப்படி

தெரியும் என்றால் ஒவ்வொரு இடத்திலும் மார்க்கெட்டிங் செய்யும்போது கட்டுமான இடத்திற்கு சென்று அங்கு ஆட்கள் தேவையா என்று கேட்டு, தலைமை அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி பிறகு உத்தரவு பெற்று ஆட்களை அனுப்பி வைப்போம். நாங்கள் தான் பிரதிவாதி கம்பெனியை அனுகினோம் என்றால் சரிதான். இந்த வழக்கு பிரச்சனைக்கு முன்பு தொழில் ரீதியாக பிரதிவாதி கம்பெனிக்கு **Security Staffs** நாங்கள் கொடுக்கவில்லை. பிரதிவாதி கம்பெனிக்கு நாங்கள் கொடுத்த இடம் **Sriperumpudur** ல் உள்ள கட்டுமான இடத்திற்கு ஆட்களை கொடுத்தோம். அதன்பிறகும் பல இடங்களுக்கு பிரதிவாதி கம்பெனிக்கு ஆட்களை கொடுத்துள்ளோம். ஆகஸ்ட் **2011** ல் அனுகி செப்டபர் **2011** முதல் **Service** செய்துக்கொடுத்தோம்.

வாதியின் கம்பெனி அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டது தான். அவ்வாறு பதிவு செய்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி கம்பெனி எங்களை அனுகியது சம்பந்தமாகவோ அல்லது நாங்கள் பிரதிவாதியை அனுகியது சம்பந்தமாகவோ எதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் வா.சா.ஆ.**2Work order for Security services at L&T Site Ennur** தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி கம்பெனி எங்களுக்கு கொடுத்த **Proposal** வா.சா.ஆ.**3** ஆகும்.

(பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தி ஒத்திவைக்கப்படுகிறது,)